1981 ஜனவரி 28]

தலைஞாயிறு பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கு திட்டம்

* வினா எண். 77 திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் தலைஞாயிறு பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் வடிகால் வாரியத்தின் மூலம் துவங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரங்கள் தேவை?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை

(ஆ) கேள்விக்கிடமில்லை.

திரு. எம். எஸ். மாணிக்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி அரசுக்கு கோரிக்கை ஏதும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : ஏற்கனவே கோரிக்கை இருந்தது. அந்தப் பேரூராட்சியிலே நிதிநிலை சரியாக இல்லாத காரணத்தினால் திட்டம் நிறைவேற்றப்படவில்லை.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு வேதாரண்யம் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டிருப்பது 'தலைஞாயிறு, பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம்' பற்றியது. தமிழக அரசு கிராமங்கள், ஊராட்சிகள், ஆகியவற்றுக்கு குடிநீர் வசதி செய்து கொடுக்க முன்னுரிமை கொடுக்கிறது. அதை நான் பாராட்டுகிறேன். . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்வி நேரம். பாராட்டுதலோ வேண்டுகோளோ கூடாது.

திரு. பொ. உத்திராபதி : வருமானம் இல்லாத பேரூராட்சிகளுக்கு குடிநீர் திட்டத்தை மறுப்பது சரியல்ல. . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; இது பொதுப்படையான கேள்வி.